முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2024) நீலாங்கரையில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினரும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளருமான எஸ்.எஸ். பாலாஜி அவர்களின் மகன் மரு. பா. கௌதம் – மரு. இரா. கீர்த்தி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிக்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள், மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற

# பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசனுக்குப் பாராட்டு விழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.17-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கம் (WSAVA CE) மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) சார்பில், பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசன் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.11.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற 21 வது உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கத்தின் தொடர் கல்வித் திட்டம் (WSAVA CE) மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) கருத்தரங்க நிகழ்ச்சியில், பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற பாரா பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசன் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

இந்த 21வது உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கத்தின் தொடர் கல்வித் திட்டம் மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் 14வது தேசிய கருத்தரங்கை துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்கே பரா பாட்மிட்டன் வீராங்கனை தங்கை துளசிமதியின் சாதனைகளை அனைவரும் போற்றி பாராட்டி உள்ளீர்கள். தங்கை துளசிமதி அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, தன்னுடைய திறமையின் மூலம், விளையாட்டுத்துறை இட ஒதுக்கீட்டில் B.V.Sc (Bachelor of Veterinary Science) சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்.

**2 கோடி ரூபாய் ஊக்கத் தொகை!**

சமீபத்தில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்று தமிழ்நாட்டுக்கு பெருமைத் தேடித் தந்துள்ளார். சர்வதேச அளவிலான போட்டிகளில் தொடர்ந்து ஏராளமான பதக்கங்களை குவித்து வருகிறார்.

சமீபத்தில், நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றதற்காக தங்கை துளசிமதி அவர்களுக்கு உயர் ஊக்கத்தொகையாக 2 கோடி ரூபாய் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தங்கை துளசிமதி அவர்களை அனைவரும் பாராட்டுவதை பார்க்கும் போது, விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அமைச்சராக மட்டுமல்லாமல், அவருடைய உடன்பிறவா அண்ணனாகவும்,, நான் பெருமையும் மகிழ்ச்சியும், அடைகிறேன். அவரை இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

உலகெங்கிலும் உள்ள கால்நடை மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு நுண்ணறிவுகளைப் பரிமாறிக் கொள்ளவும், புதுமைகளைப் பகிர்ந்து கொள்ளவும், சிறிய விலங்கு பராமரிப்பில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கவும் இந்த சிம்போசியம் அவசியமான தளமாக உள்ளது.

கால்நடை நிபுணர்களாக, உங்கள் பொறுப்பு தனிப்பட்ட சிறு விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பதைத் தாண்டி, பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல், செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு கல்வி கற்பித்தல், விலங்குகள் மற்றும் அவற்றின் பராமரிப்பாளர்களின் உடல் நலனை பேணுகின்ற பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவர்களுக்கு மனநலத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்த விரும்புகிறேன். உங்களுடைய தொழில், பெரும்பாலும் உணர்வுரீதியாகவும், உடல்ரீதியாகவும் சவாலானதாகும்.

இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்காக தமிழ்நாடு சிறு விலங்குகள் பயிற்சியாளர்கள் சங்கத்தின் முயற்சிகளை நான் வாழ்த்துகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், கால்நடைகளின் நலனை மேம்படுத்துதல் மற்றும் கால்நடைகளுக்கான மாநில சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு வெளியிட்ட சில குறிப்பிடத்தக்க அறிவிப்புகளை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**ரூ. 1 கோடியில் ரேபிஸ் தடுப்பூசி!**

ஒரு முக்கிய நடவடிக்கையாக, கால்நடை பராமரிப்புத் துறையின் ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இதில், 5 லட்சம் தெரு விலங்குகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி 1 கோடி ரூபாய் செலவில் 50% மானியத்துடன் போடப்படும். இம்முயற்சி நமது விலங்குகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், வெறிநாய்க்கடி பரவுவதைத் தடுப்பதன் மூலம் பொது சுகாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும்.

மேலும், 400 கால்நடை மருத்துவர்களுக்கு ரூ.1 கோடி செலவில் விரிவான திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தை வழங்குவதற்கான அறிவிப்பையும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு வெளியிட்டுள்ளது. கால்நடை மையங்களில் நவீன நோயறிதல் கருவிகளைக் கையாளும் நிபுணத்துவத்தை மருத்துவர்களுக்கு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கால்நடை மருத்துவ நிபுணர்களை புதிய தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாடு விலங்குகளின் ஆரோக்கியம் மற்றும் நலனில் முன்னணியில் இருப்பதை உறுதி செய்கின்றோம்.

இந்த முற்போக்கான நடவடிக்கைகள், விலங்குகளுக்கு ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் நிலையான சூழலை உருவாக்குவதற்கான தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன. இந்த கருந்தரங்க நிகழ்ச்சியானது, விலங்குகளின் வாழ்க்கையை வளப்படுத்த அர்த்தமுள்ள விவாதங்களில் ஈடுபட உதவும் என்று நான் நம்புகிறேன். இந்த கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் பாராட்டப்பட்ட தங்கை துளசிமதி அவர்கள் விளையாட்டுத்துறை, கால்நடை மருத்துவத்துறை என இரண்டிலும் இன்னும் பல உயரங்களைத் தொட நம்முடைய திராவிட மாடல் அரசும், முதலமைச்சர் அவர்களும் என்றும் அவருக்கு துணை நிற்பார்கள். அவரது சாதனைகள் தொடரட்டும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண் ராஜ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு.கே.என்.செல்வகுமார், இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) தலைவர் மரு.ஆர்.ஜெயபிரகாஷ், தமிழ்நாடு சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்க தலைவர் மரு.ஜெ.வெங்கடேஷ், மற்றும் மரு.டி.சுரேஷ், மரு. பி.ஸ்ரீதேவி உள்பட கால்நடை மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி சார்பில் மறைமலைநகரில் நடைபெற்ற தி.மு.கழக செயல்வீரர்கள் கலந்தாலோசனை கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் தொகுதி பொறுப்பாளர் பிரபு கஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட கழக துணை செயலாளர்கள் வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து.மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், ஒன்றிய செயலாளர் ஆப்பூர் சந்தானம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

நியூஸிலாந்து நாட்டில், ஆக்லாந்து நகரிலுள்ள தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 15-11-2024 அன்று நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

### தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்களில்

# துணைவேந்தர்கள் இல்லாததற்கு ஆளுநரே முழு பொறுப்பு!

## யு.ஜி.சி. தலைவர் ஆளுநரிடம்தான் கேள்வி எழுப்ப வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ.17

தமிழ்நாட்டில் பல பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனம் இல்லை என்று ஒரு குற்றச்சாட்டுபோல பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் (யு.ஜி.சி.) பேட்டியளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 'போட்டி அரசு' போல நடத்திக் கொண்டிருக்கும் ஆளுநர் ஆர்.என். ரவியே அதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறார். யு.ஜி.சி. தலைவர், ஆளுநரை நோக்கி இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டுமே தவிர, தமிழ்நாடு அரசு எந்த வகையிலும் இதற்குப் பொறுப்பு அல்ல என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தியாவிலேயே கல்வி, மருத்துவத் துறைகளில் 'திராவிட மாடல்' அரசாகிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது தி.மு.க. அரசின் சாதனைகள், எடுத்துக்காட்டானவைகளாகத் திகழ்கின்றன.

குறிப்பாக இவ்வாட்சியில் பள்ளிக் கல்வியும், உயர்கல்வியும், தொழில் கல்வியும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு வளரும் நிலையைக் கண்டு, 'திராவிட மாடல்' ஆட்சிக்கு நாளும் நாட்டிலும், உலகின் பிற நாடுகளிலும் வரும் புகழை ஜீரணிக்க முடியாத திராவிட எதிரிகளும், அரசியல் காழ்ப்புணர்வாளர்களும் இதனைத் தடுக்கவும், சமூகநீதிக் கொடி பெரியார் மண்ணில் தலைதாழாமல் பறந்து கொண்டிருப்பதாலும் எரிச்சல் அடைந்து, அதைத் தடுக்கும் பணியை தங்களுக்குள்ள சிற்சில அதிகாரங்களைக் கொண்டு - குறுக்கு வழியில் முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறையின் அதிவேக வளர்ச்சிகளால் ஏராளமான பல்கலைக் கழகங்கள் இங்கே உருவாகியுள்ளன!

**பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவர்!**

அதில் பெரும்பாலான பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தர்களே பல ஆண்டுகளாக இல்லாது, 'தலையில்லா உடல்மட்டும் இயங்கும்' கேலிக்கூத்தாக தமிழ்நாட்டின் பிரபல பல்கலைக் கழகங்கள், சென்னை பல்கலைக் கழகம் முதல் சுமார் 7, 8 பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன. இதனை யு.ஜி.சி. தலைவர் (பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர்) தமிழ்நாடு அரசிடம் சுட்டிக்காட்டியுள்ளதாக நேற்று (15.11.2024) ஒரு செய்தி வெளிவந்துள்ளது குறித்து வேதனையும், வெட்கமும் அடையவேண்டியுள்ளது.

தமிழ்நாடு அரசா? அல்லது 'exofficio' வேந்தர் - Chanceller என்ற ஓர் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மாநிலக் கல்வித் துறையில் தேவையில்லாமல் தலையிட்டு, இதுபோன்ற 'தலையில்லாப் பல்கலைக் கழகங்களில் வேந்தர்' என்பதில் பெருமை கொள்ளுபவர் - பதவிக் காலம் முடிந்தும் மறு அறிவிப்புவரை ஆளுநராக உள்ள தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி ஆவார்!

தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் போலவேதான் அவரது அன்றாட அரசியல் நடவடிக்கைகளும், அறிவிப்புகளும் இருக்கின்றன; ஒரு போட்டி அரசினை நடத்துவதாகவே மக்களுக்கும் நன்கு புரிகிறது. அரசமைப்புச் சட்ட விதிகளுக்குப் புறம்பாகவே அவர் இப்படி நடந்துவருகிறார்.

தமிழ்நாடு அரசின் சட்டத் திருத்த வரைவை கிடப்பில் வைத்திருக்கும் ஆளுநர் சில ஆண்டுகளுக்கு முன்பே ஒரு சட்டத் திருத்தத்தை தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது - உயர்கல்வித் துறையில். மாநில அரசின் பல்கலைக் கழகங்களில் வேந்தராக ஆளுநருக்குப் பதிலாக மாற்றம் செய்த அச்சட்டத் திருத்த வரைவை திருப்பி அனுப்பாமலேயே அவர் கிடப்பில் போட்டு வைத்திருப்பதே இதற்கு மூலகாரணம் ஆகும்.

பல முக்கிய பல்கலைக் கழகங்களில் படித்து, பட்டதாரி, மேல்பட்டதாரி தேர்வில் வெற்றி பெற்று பல ஆண்டுகளாகியும் நியமனங்கள் பெற முடியாதபடி, அந்த பட்டங்கள் (Degree) பட்டமளிப்பு விழா தேதியைத் தராத காலதாமதம்பற்றி பல விமர்சனங்கள் எழுந்த பின்னரே, துணைவேந்தர்களே இல்லாத - 'வேந்தரே சர்வமும்' என்ற கேலிக்கூத்தோடு அவை நடைபெறுகின்றன.

இது பற்றி தமிழ்நாடு அரசும், கல்வி ஆர்வலர்களும், பெற்றோரும் - ஆளுநர் போக்கு, உயர்கல்விக்கு அவரால் ஏற்படும் பாதகங்கள் - வளர்ச்சித் தடைகள்பற்றி உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் போட்டு, நீதி கேட்க வேண்டும். இதற்கு தமிழ்நாடு அரசு மட்டுமா பொறுப்பு. வேந்தர் ரவியிடம் அல்லவா கேள்வி எழுப்ப வேண்டும்.

இந்த நிலை நீடிப்பதை எவ்வளவு காலத்திற்குப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? தமிழ்நாட்டின் ஆளும் கட்சிக்கு மட்டும்தான் பொறுப்பா? மாநில கல்வி உரிமையை நாளும் பறிக்கும் ஒன்றிய அரசின் முகவர்கள் போடும் முட்டுக்கட்டைகளை அகற்றி- கல்வி நீரோடை தங்குதடையின்றிப் பாய உடனே ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி ஒரு மாதம் தொடர்ந்து கொண்டாடப்படும்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

மதுரை, நவ.17:

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவை பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் ஒரு மாதம் தொடர்ந்து கொண்டாடப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்

மதுரை வடக்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் மதுரை உத்தங்குடியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., ஆசைக்கண்ணன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கருதியாகராஜன், வடிவேல் முருகன், புதூர் சேகர், வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளின் பொறுப்பாளர்கள் செந்தில்குமார், கிருஷ்ணகுமார், செல்வகுமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள், விளையாட்டு விழாக்கள் என பல்வேறு நலத்திட்டங்கள் செய்வது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கரு.தியாகராஜன், வடிவேல் முருகன், புதூர் சேகர், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், தொகுதி பொறுப்பாளர்கள் செந்தில்குமார், கிருஷ்ணகுமார், செல்வகுமார் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் உள்ளனர்.

இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது

வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் இளைஞர் எழுச்சி நாளான தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை வருகின்ற 27ஆம் தேதி துவங்கி ஒரு மாத காலத்திற்கு ஏழை, எளியோர் உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் என எழுச்சியுடன் தொடர்ந்து நடத்திட வேண்டும். விரைவில் தமிழ்நாடு முதல்வர் மதுரை மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொள்ள உள்ளார், அப்போது கழக நிர்வாகிகளையும் சந்தித்து கழக ஆக்க பணிகள் குறித்து ஆய்வு நடத்த உள்ளார்.

மேலும் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் இருநூறு தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வேண்டுமென கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார், அதற்கேற்ப மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவிக்கும் வேட்பாளர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அதற்கான பணிகளை இப்போதே தொடங்க வேண்டும்.

மேலும் தேர்தல் பணியோடு மக்கள் பணியையும் செய்திட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு மாவட்டமாக முதல்வரும் துணை முதல்வரும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்கள் நலத்திட்டங்களை வழங்கி வருகின்றனர், நமது மாவட்டத்தின் சார்பாக கூட ஒத்தக்கடையில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில் கட்சி பாகுபாடின்றி பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

வருகிற பிப்ரவரி மாதத்தில் ஒரு மிகப்பெரிய எழுச்சியை தமிழகம் முழுவதும் உருவாக்குவதற்காக கூட்டணி கட்சியினர் அனைவரையும் அரவணைத்து பொதுமக்களை சந்திக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது, ஆகவே அன்று எதிர்க்கட்சியாக இருந்த போதே நம்முடைய மாவட்டம் சிறப்பாக செயல்பட்டது, அதைப்போல இன்றைக்கு நம்முடைய அரசு ஆட்சி பொறுப்பில் இருக்கிற போது அதைவிட பல மடங்கு சிறப்பாக செயல்பட வேண்டும், செயல்படுவோம் என்ற தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே வருகிற 27ஆம் தேதி முதல் வடக்கு மாவட்டத்தின் சார்பாக அனைத்து பகுதிகளிலும் சிறப்பாக கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாவை கிராமங்கள், நகரங்கள் தோறும் விழாக்கோலம் காணும் வகையில் கொண்டாடப்பட வேண்டும் அதற்காக அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழகம் மற்றும் பேரூர் கழகத்தில் எந்தெந்த பகுதியில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடத்த உள்ளோம் என்பதை மாவட்ட கழகத்திற்கு அனைவரும் தகவல் தர வேண்டும் என கூறினார். மேலும் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்குதல் உள்ளிட்ட பணிகளில் கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி பாக முகவர்கள் முழுமையாக ஈடுபட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்

மேலும் இக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், பொதும்பு தனசேகர், பசும்பொன்மாறன், பால ராஜேந்திரன், தன்ராஜ், பரந்தாமன், மதிவாணன், பகுதி செயலாளர்கள் மருது பாண்டியன், சசிக்குமார், கௌரிசங்கர், பாண்டியராஜன், பேரூர் செயலாளர்கள் மு.பால்பாண்டியன், சத்தியபிரகாஷ், ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், மாவட்ட பிரதிநிதி அழகுபாண்டி, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வீரராகவன், ஆதிசங்கர், இளங்கோவன், ஒத்தக்கடை சரவணன், மூவேந்திரன், கலைகார்த்திகேயன், ஜான், தக்காக்குடி சரவணன், வெற்றிச்செல்வன், மருதுராஜா, வன்னிமுத்துப்பாண்டி, மாவட்ட அறங்கால் குழு தலைவர் ரவிச்சந்திரன், மேலூர் நகராட்சி சேர்மன் முகமது யாசின், மாமன்ற உறுப்பினர்கள் உத்தங்குடி தன்ராஜ், திருப்பாலை ராமமூர்த்தி, சோழவந்தான் பேரூராட்சி சேர்மன் ஜெயராமன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

கூட்டம் முடிவில் கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது.